தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## 19.10.2013

### விவசாயிகள் காய்கறிகளை புறநகர் சேமிப்பு மையங்கள் மூலம் விற்பனை செய்யலாம்: ஆட்சியர்

விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள புறநகர் காய்கறி சேமிப்பு மையங்களில் விவசாயிகள் தங்கள் காய்கறிகளை கொண்டு வந்து வைத்து நேரடியாக அதிக லாபத்துக்கு விற்பனை செய்யலாம் என்று விவசாயிகள் குறைகேட்புக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் வா.சம்பத் தெரிவித்தார்.

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுலவலகத்தில் விவசாயிகள் குறைதீர்ப்பு நாள் கூட்டம் வெள்ளிக்கிழமை விழுப்புரத்தில் நடைபெற்றது. இக் கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சியர் வா.சம்பத் தலைமை தாங்கி பேசியது:

தமிழக முதல்வரின் உத்தரவுப்படி விவசாயிகளின் உற்பத்தியை இரண்டு மடங்காக உயர்த்திடவும், அவர்களின் வருமானத்தை மூன்று மடங்காக உயர்த்தி மாநிலத்தில் 2-ம் பசுமை புரட்சியை உருவாக்கவும் விழுப்புரம் மாவட்டத்தில் நடப்பாண்டு முதல் மூன்று ஆண்டுகளுக்கு ஒருங்கிணைந்த பண்ணைய திட்டம் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுவரை மாவட்டத்தில் 1602 பயனாளிகள் அனைத்து வட்டாரங்களிலும் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

மேலும் தேர்வு பணிகள் தொடர்ந்து நடைபெற்று கொண்டிருப்பதால் விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண் விரிவாக்க அலுவலர்கள் மூலம் பதிவு செய்து பயன்பெறலாம்.

மேலும் தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகள் தங்கள் வருமானத்தை உயர்த்தவும், நுகர்வோர்கள் அதிக அளவு பயன்பெறும் வகையில் மாவட்டத்தில் செப்டம்பர் 1-ம் முதல் ஒலக்கூர் மற்றும் ஆலங்குப்பம் கிராமங்களில்

புறநகர் காய்கறி சேமிப்பு மையங்கள் தொடங்கி வைக்கப்பட்டு, விவசாயிகள் தங்கள் காய்கறிகளை நேரடியாக அதிக லாபத்துக்கு வியாபாரிகளும், பொதுமக்களும் இடைத்தரர்கள் இன்றி வழங்கி பயன்பெற்று வருகிறார்கள்.

விழுப்புரம் மாவட்டத்தில் மழைநீரை சேமிக்கும் வகையில் மாவட்டத்தில் உள்ள வரத்து வாய்க்கால், அனைத்து ஏரிகளையும் ஆழப்படுத்தவும், ஆக்கிரமிப்புகளை அகற்றவும், நடப்பு சம்பா பருவத்துக்கு கூடுதலாக நெல் விதைகள், உரங்கள் அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் இருப்பு உள்ளதாகவும், வனவிலங்குகள் விவசாய நிலங்களில் பாதிப்பு ஏற்படுவதை தடுக்கவும், கூட்டுறவுத் துறை மூலம் குறைகள் தீர்த்திடவும், கரும்பு விவசாயிகள் குறைகள் தீர்த்திடவும், வனத்துறை, கூட்டுறவுத் துறை, வேளாண் துறை மற்றும் மாவட்டத்தில் உள்ள அனைத்து சர்க்கரை ஆலைகளுடன் முத்தரப்பு கூட்டம் நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்க சம்மந்தப்பட்ட அதிகாரிகள் தனி கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

இக் கூட்டத்தில் பேசிய விவசாயிகள் பலர் வரத்து வாய்க்கால்களை தூர் வார வேண்டும், ஆலைகளில் கரும்புக்கு உடனடியாக பணம் பட்டுவாடா செய்ய அறிவுறுத்த வேண்டும், மின் இணைப்பு வழங்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தினர்.

இக் கூட்டத்தில் வேளாண்மை இணை இயக்குநர் ஆர்.சக்கரவர்த்தி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(விவசாயம்) சு.ராஜசேகரன், தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் ராஜூ, தமிழ்நாடு மின்சார வாரிய கண்காணிப்பு பொறியாளர்கள் மா.அசோகன், அருட்பெருஞ்சோதி, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் ஆர்.கிருஷ்ணமூர்த்தி, செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் ரெ.சிங்காரம் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**கருகும் பயிரை காப்பாற்ற தண்ணீர் கோரி சீர்காழி வட்டத்தில் அக். 22-ல் சாலை மறியல்**

நாகை மாவட்டம், சீர்காழி வட்டத்தின் கடைமடைப் பகுதி விவசாயத்தைக் காப்பாற்ற தண்ணீர் கோரி அக். 22-ம் தேதி சீர்காழி வட்டத்தில் 2 இடங்களில்

சாலை மறியல் போராட்டம் நடத்துவது என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நாகை மாவட்டம், சீர்காழியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சீர்காழி உறுப்பினர் பேரவை கூட்டம், வெள்ளிக்கிழமை நடைபெற்றது. சீர்காழி ஒன்றியப் பேரவைச் செயலர் மு. செல்லப்பன் தலைமை வகித்தார்.

விவசாயத் தொழிலாளர் சங்க மாநிலச் செயலர் நா. பெரியசாமி சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு பேசினார்.

கட்சியின் மாவட்டத் துணைச் செயலர் அ. சீனிவாசன், ஒன்றியத் துணைச் செயலர் கோ. செல்வராசு உள்ளிட்டோர் பேசினர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

சீர்காழி வட்டத்தின் கடைமடை பகுதி விவசாயப் பணிகளுக்குத் தேவைக்கேற்ப தண்ணீர் திறக்கக் கோரி அக். 22-ம் தேதி சீர்காழி வட்டத்துக்குள்பட்ட வைத்தீஸ்வரன்கோவில், சூரைக்காடு முக்கூட்டு ஆகிய பகுதிகளில் சாலை மறியல் போராட்டம் மேற்கொள்வது.

கட்சியின் உறுப்பினர் பதிவை திட்டமிட்டபடி டிசம்பர் 26-ம் தேதிக்குள் நிறைவு செய்வது என தீர்மானிக்கப்பட்டது.

**நேரடி நெல் விதைப்பு வயல்களில் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த யோசனை**

நேரடி நெல் விதைப்பு செய்யப்பட்ட பயர்களில் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலைய  பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் க. சோழன்  யோசனை தெரிவித்துள்ளார்.

திருவாரூர் மாவட்டத்தில் நேரடி நெல் விதைப்பின் மூலம் பயிரிடப்பட்டுள்ள சிஆர் 1009 மற்றும் பிபிடி 5204 ரகங்களில் 35-லிருந்து 40 நாட்களில் உள்ள பயிர்களில் மாவுப் பூச்சி தாக்குதல் பரவலாக காணப்படுவது கண்டறியப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட தூர்களின் அடி பாகத்தில் வெண்மை நிற மாவுப்பூச்சிகள் கூட்டம் கூட்டமாக இருந்து கொண்டு பயிரின் சாற்றை உறிஞ்சுவதால் பாதிக்கப்பட்ட பயிர்கள் சிவந்து வாடி பின் கருகி விடும். இதைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டர்

தண்ணீரில் ஒரு மில்லி ஒட்டு திரவத்துடன் மீதைல் டெமட்டான் அல்லது டைமீத்தோயேட் இரண்டு மில்லி  கலந்து தெளிக்கவும் அல்லது அசிபேட் 0.5 கிராம் ஒரு லிட்டர் தண்ணீரில் ஒரு மில்லி ஒட்டு திரவத்துடன் கலந்து பயிர்கள் நன்கு நனையும்படி தெளிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

**மீன் வளர்ப்போர்உபகரணங்கள் பெற விண்ணப்பிக்கலாம்**

மீன் வளர்ப்பில் ஈடுபட்டுள்ளவர்கள் மானிய விலையில் உபகரணங்கள் பெற விண்ணப்பிக்கலாம் என தெரிவித்துள்ளார் திருவாரூர் மாவட்ட ஆட்சியர் சி. நடராசன்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

மாவட்டத்தில் தேசிய புரத இணை உணவுத் திட்டத்தின் கீழ் மீன் வளர்ப்பில் ஈடுபட்டுள்ளவர்கள் ஒருங்கிணைந்து மீன் வளர்ப்பில் ஈடுபட்டு உற்பத்தியைப் பெருக்க பண்ணைக்கு தேவையான உபகரணங்கள் மானிய விலையில் வழங்கப்படுகின்றன.

காற்று உற்பத்தி கருவி, மீன் உற்பத்தி கருவி, பறவை தடுப்பு வலை ஆகியவை 25 சதவிகித மானியத்தில் வழங்கப்படுகிறது.

எனவே, தேவைப்படுவோர் திருவாரூர் மீன்வளத் துறை உதவி இயக்குநர் அலுவலகம், சிவம் நகர், பனகல் சாலை என்ற முகவரிக்கு விண்ணப்பித்து பயன் பெறலாம். மேலும் விவரங்களுக்கு 04366-224140.

**விவசாயிகளுக்கு துவரை நடவுப்  பயிற்சி**

சேலம் உழவர் பயிற்சி நிலையத்தின் சார்பில், விவசாயிகளுக்கு துவரை நடவு குறித்த செயல்முறை விளக்கப் பயிற்சி வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பயறு வகை இயக்கத்தின் சார்பில் துவரை நடவு முறை குறித்து விவசாயிகளுக்கானப் பயிற்சி, காடையாம்பட்டி வட்டாரம் சந்தைப்புதூர் கிராமத்தில் நடைபெற்றது. காடையாம்பட்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அ.நாசர், துவரை சாகுபடியின் முக்கியத்துவம், உயிர் உரங்களின் முக்கியத்துவம் குறித்து பேசினார்.

உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை அலுவலர் த.சரஸ்வதி, துவரை நாற்றங்கால், நடவு வயல் நிர்வாகம் குறித்து விளக்கினார். துணை வேளாண்மை அலுவலர் கு.ரவிக்குமார் பூச்சி. நோய்க் கட்டுப்பாடு குறித்து பேசினார்.

அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் க.ராஜேந்திரன், துவரை உர நிர்வாகம் குறித்து எடுத்துக் கூறினார். உதவி வேளாண்மை அலுவலர் அ.தண்டபாணி, துவரை விதை நேர்த்தி செயல் விளக்கம் செய்து காட்டினார்.

பயிற்சியில் கலந்துகொண்ட விவசாயிகளை துவரை நடவுச் சாகுபடிச் செய்துள்ள தோட்டத்துக்கு நேரிடையாக அழைத்துச் சென்று நுனிகிள்ளுதல் மற்றும் இதரத் தொழில்நுட்பங்கள் குறித்த ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

**"1320 ஹெக்டேரில் சொட்டுநீர், நுண்நீர் பாசனம்**

வேலூர் மாவட்டத்தின் விவசாய மேம்பாட்டு பணியில், நடப்பாண்டில் 1,320 ஹெக்டேர் பரப்பில் சொட்டுநீர் பாசனம் மற்றும் நுண்நீர் பாசனம் செய்வதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று ஆட்சியர் பொ.சங்கர் தெரிவித்தார்.

ஆட்சியர் அலுவலகத்தில் உலக உணவு தின விழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இவ்விழாவுக்கு தலைமை தாங்கி ஆட்சியர் பேசியது:

எந்தத் தொழிலை காட்டிலும் சிறந்த தொழிலாக பண்டைய காலம் தொட்டு வேளாண் தொழில் விளங்குகிறது. உழவுத் தொழிலை பாதுகாப்பதன் மூலமே நாட்டின் உணவு தேவையை பூர்த்தி செய்துகொள்ள முடியும் என்பதை உணர்ந்து தமிழக முதல்வர் விவசாயிகள் உணவு உற்பத்தியை பெருக்க, இரண்டாவது பசுமை புரட்சியை ஏற்படுத்த பல்வேறு செயல்படுத்தி வருகிறார். குறைந்த நீர்வளத்தை செம்மையாக பயன்படுத்தி உணவு உற்பத்தியை பெருக்குவதற்கு ஏதுவாக சொட்டுநீர் பாசனம், நுண்நீர் பாசனம் கைக்கொடுக்கிறது. இத்திட்டங்களை செயல்படுத்தும் பெரிய விவசாயிகளுக்கு 75 சதவீத மானியமும், சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியமும் வழங்கப்படுகிறது.

கடந்த ஆண்டில் மாவட்டத்தி0ல் 800 ஹெக்டேர் குறியீடு நிர்ணயம் செய்து 640 ஹெக்டேரில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. நடப்பாண்டில் 1,320 ஹெக்டேர் இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும் தேவையெனில் அரசிடம் தெரிவித்து

உதவிகளை பெற்றுத் தரவும் மாவட்ட நிர்வாகம் தயாராக உள்ளது என்றார் ஆட்சியர்.

இந்நிகழ்ச்சியில் பட்டுத் தொழில் மேற்கொண்டுள்ள விவசாயிகளுக்கு 2012-13-ம் ஆண்டு கிரியா ஊக்கித் திட்டத்தின் கீழ், 74 பட்டு விவசாயிகளுக்கு ரூ.20.17 லட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் வழங்கினார்.

கரும்பு ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் ராஜேந்திரன், விரிஞ்சிபுரம் வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீதர், உழவர் பயிற்சி நிலைய துணை இயக்குநர் ராமசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**உணவு உற்பத்தியை அதிகரிக்கக் கோரிவிவசாயிகள் நூதனப் போராட்டம்**

தமிழகத்தில் உணவு உற்பத்தியை அதிகரிக்கக் கோரி, திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு விவசாயிகள் நூதனப் போராட்டத்தில் வெள்ளிக்கிழமை ஈடுபட்டனர்.

தமிழக உழவர் சங்கங்களின் கூட்டமைப்பு நிர்வாகிகள் வெள்ளிக்கிழமை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரே திரண்டனர். திடீரென தாங்கள் கொண்டு வந்திருந்த வாழை இலைகளை தரையில் போட்டு அதன் மீது செல்போன்கள், செருப்பு மற்றும் இரும்புப் பொருட்களை வைத்தனர். பின்னர் அவற்றுக்கு கற்பூரம் ஏற்றி நூதன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது, தமிழகத்தில் நாளுக்கு நாள் உணவு உற்பத்தி குறைந்து கொண்டே வருகிறது. நெல் உற்பத்தி குறைந்தது, செல் உற்பத்தியும், கரும்பு உற்பத்தி குறைந்து இரும்பு உற்பத்தி அதிகரித்து விட்டன. இதேபோல, பருப்பு உற்பத்தி குறைந்து செருப்பு உற்பத்தி அதிகரித்து விட்டது. செல்போன், இரும்பு, செருப்புகளை சாப்பிட முடியுமா. இதேநிலை தொடர்ந்தால் எதிர்காலத்தில் உணவுக்கு திண்டாட வேண்டிய நிலை ஏற்படும்.

எனவே, தமிழக அரசு துரித நடவடிக்கை எடுத்து உணவு உற்பத்தியைப் பெருக்கும் திட்டங்களை அறிவிக்க வேண்டும் என்று அவர்கள் கோஷம் எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். உடனே, போலீஸார் விரைந்து வந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட புருஷோத்தமன் தலைமையிலான சங்க நிர்வாகிகளை அப்புறப்படுத்தினர்.

**பவானிசாகர் நீர்மட்டம்**

பவானிசாகர் அணை நீர்மட்டம் வெள்ளிக்கிழமை நிலவரப்படி 71.16 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 4,748 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் தண்ணீர் திறக்கப்படவில்லை. வாய்க்காலில் 2,200 கனஅடி நீர் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 11.46 டி.எம்.சி.

**பருவ மழை: நீலகிரி மாவட்டத்தில் 9 இடங்களில் 24 மணி நேரக் கட்டுப்பாட்டு அறைகள் திறப்பு**

வட கிழக்குப் பருவ மழை காரணமாக நீலகிரி மாவட்டத்தில் 9 இடங்களில் 24 மணி நேரக் கட்டுப்பாட்டு அறைகள் திறக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக, மாவட்ட ஆட்சியர் (பொ) இல.நிர்மல்ராஜ் தெரிவித்துள்ளது:

வட கிழக்குப் பருவ மழை காரணமாக நீலகிரி மாவட்டத்தில், உதகை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 1077 என்ற எண் கொண்ட கட்டுப்பாட்டு அறை செயல்பட்டு வருகிறது. இதில், வெள்ளச் சேதம் குறித்து உடனுக்குடன் தகவல் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த அலுவலகத்தை தொடர்பு கொண்டு வெள்ள நிவாரணம் தொடர்பான தகவல்களை தொலைபேசிக் கட்டணமின்றித் தெரிவிக்கலாம். இக் கட்டுப்பாட்டு அறையில் 24 மணி நேரமும் பணியாளர்கள் சுழற்சி முறையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

அதேபோல், குன்னூர் மற்றும் கூடலூர் வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகங்களிலும், அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களிலும் வெள்ளக் கட்டுப்பாட்டு அறைகள் திறக்கப்பட்டுள்ளன.

இப் பகுதிகளுக்கான தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு விவரங்களைத் தெரிவிக்கலாம். கட்டுப்பாட்டு அறைகள் அமைந்துள்ள அலுவலகங்களும், அவற்றின் தொலைபேசி எண்களும்:

குன்னூர் வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகம்: 0423-220 6002, கூடலூர் வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகம்: 04262-261 295, உதகை வட்டாட்சியர் அலுவலகம்: 0423-244 2433, குன்னூர் வட்டாட்சியர் அலுவலகம்: 0423-220 6102, கோத்தகிரி வட்டாட்சியர் அலுவலகம்: 04266-271 718, குந்தா வட்டாட்சியர் அலுவலகம்: 0423-250 8123, கூடலூர் வட்டாட்சியர் அலுவலகம்: 04262-261 252 மற்றும் பந்தலூர் வட்டாட்சியர் அலுவலகம்: 04262-220 734.

**அக். 25 விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வரும் 25 ஆம் தேதி பிற்பகல் 3.30 மணிக்கு, மாவட்ட நிர்வாகம் சார்பில், விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற உள்ளது.

ஆட்சியர் கே.எஸ். பழனிசாமி தலைமையில் நடைபெற உள்ள இந்த குறைதீர் கூட்டத்தில், விவசாயிகள் மற்றும் விவசாயிகள் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு, தங்களது குறைபாடுகளைத் தெரிவித்து தீர்வு காணலாம் என்று, ஆட்சியரின் நேர்முக உதவியாளர் எஸ். முத்தையா தெரிவித்துள்ளார்.

**18ஆம் கால்வாயில் பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு**

லோயர்கேம்ப் அருகே 18ஆம் (பழனிவேல்ராஜன்) கால்வாயிலிருந்து பாசனத்துக்கு தண்ணீரை வெள்ளிக்கிழமை மாவட்ட ஆட்சியர் கே.எஸ்.பழனிசாமி திறந்துவைத்தார்.

லேயர்கேம்ப் முல்லைப் பெரியாற்றிலிருந்து வைரவன் அணை அருகே 18ஆம் கால்வாய் அமைந்துள்ளது. 39.5 கி.மீ தூரமுள்ள 18ஆம் கால்வாய் கூடலூர், கம்பம், உத்தமபாளையம், தேவாரம் உள்ளிட்ட பகுதிகளில் 13 கிராமங்களுக்கும், 44 கண்மாய்கள் மூலம் உத்தமபாளையம் வட்டத்தில் 2,045 ஏக்கரும், போடி வட்டத்தில் 2,568 ஏக்கர் உள்பட 4,613 ஏக்கர் நிலங்கள் பாசன வசதிபெறும். 18ஆம் கால்வாயிலிருந்து ஆண்டுக்கு 9 நாள்கள் மட்டுமே பாசனத்துக்கு தண்ணீர் திறந்துவிட அரசு உத்தரவு உள்ளது.

இந்தாண்டு பாசனத்துக்காக மாவட்ட ஆட்சியர் கே.எஸ்.பழனிசாமி வெள்ளிக்கிழமை (அக்.18) தண்ணீர் திறந்துவிட்டார். இந்த கால்வாயில் விநாடிக்கு 279 கனஅடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. திறந்துவிடப்படும் தண்ணீரை விவசாயிகள் சிக்கனமாக பயன்படுத்தி கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில், வைகை-பெரியாறு கண்காணிப்பு பொறியாளர் ராஜேஷ், மஞ்சளாறு கோட்ட செயற்பொறியாளர் காசிபாண்டியன், உதவி செயற் பொறியாளர்கள் அன்புச்செல்வன், பாண்டி, பாலமுருகன், உத்தமபாளையம் கோட்டாட்சியர் ஜானகி, வட்டாட்சியர் தனலிங்கம், 18ஆம் கால்வாய் விவசாயிகளும், சங்க பிரதிநிதிகளும், மற்றும் கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**விவசாயிகள் ஆர்ப்பாட்டம்**

விருதுநகர் மாவட்டத்தில் போதிய மழையின்றி வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னை விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வலியுறுத்தி வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடந்த ஆர்ப்பாட்டத்திற்கு தென்னை விவசாயிகள் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் சிங்கராஜ் தலைமை வகித்தார். தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் விஜயமுருகன் விளக்கவுரை ஆற்றினார். மாமர விவசாயிகள் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் ராமச்சந்திரராஜா மற்றும் விவசாய சங்கத்தின் பிரதிநிதிகளான முத்தையா, குருசாமி ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற விவசாயிகள் சங்க பிரதிநிதிகள் கூறுகையில், இம்மாவட்டத்தில் உள்ள ராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர் உள்பட பல பகுதிகளில் 30 ஆயிரம் ஏக்கர் வரையில் தென்னை மரங்கள் பயிரிடப்பட்டுள்ளன. இப்பகுதியில் போதிய மழை இல்லாததாலும், கிணற்றிலும் நீர் வற்றிவிட்டதாலும் 70 சதவீதம் தென்னை மரங்கள் கருகி விட்டன. 20 சதவீதம் மரங்கள் காய்ப்புத் திறன் இல்லாததால் விவசாயிகள் கடுமையாக பாதித்துள்ளனர். அதனால்,

வறட்சியால் பாதித்த தென்னைமர விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.50 ஆயிரம் வரையில் நிவாரண உதவி வழங்க வேண்டும்.

ஏற்கனவே இது தொடர்பாக பல முறை ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் கோரிக்கை வைத்த நிலையில் மாவட்டத்தில் 15 ஆயிரம் ஏக்கரில் முழுவதுமாக தென்னை மரங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் 12 ஆயிரம் விவசாயிகள் நஷ்டம் அடைந்துள்ளனர். இது குறித்து அரசுக்கு பரிந்துரை செய்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனவே விரைவில் நிவாரணம் வழங்க வேண்டும் என்று அவர்கள் தெரிவித்தனர். பின்னர் தென்னை மர விவசாயிகள் சங்கத்தினர் ஆட்சியரிடம் மனு கொடுத்தனர்.

**தென் தமிழகத்தில் கனமழைக்கு வாய்ப்பு**

தென் தமிழகத்தில் ஆங்காங்கே சனிக்கிழமை கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வட தமிழகத்தின் சில பகுதிகளில் மழையோ இடியுடன் கூடிய மழையோ பெய்யும். சென்னையை பொருத்தவரையில் வானம் பொதுவாக மேகமூட்டமாக காணப்படும். மாலை அல்லது இரவில் மழையோ இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது.

இந்த நிலையில் வெள்ளிக்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் தேவக்கோட்டை பகுதியில் 70 மி.மீ. மழை பெய்துள்ளது.

மற்ற பகுதிகளில் பெய்த மழை அளவு (மில்லி மீட்டரில்): இளையாங்குடி, சிவகங்கை, மானாமதுரை, அரிமளம் - 50, காரைக்குடி, ராமநாதபுரம், நத்தம், நிலக்கோட்டை, காஞ்சிபுரம், சாத்தூர் - 30, சிவகாசி, சேலம், திருப்பத்தூர், ராமேஸ்வரம், வந்தவாசி, திருவாலங்காடு, பாம்பன், கீரனூர் - 20, செங்கல்பட்டு, பரமக்குடி, அரக்கோணம், வல்லம், கமுதி, அருப்புக்கோட்டை - 10.

**விவசாயிகளுக்கு ஆட்சியர் வேண்டுகோள்**

திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பத்தை அனைத்து விவசாயிகளும் கடைபிடிக்க வேண்டும் என திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் கொ. வீரராகவராவ் வேண்டுகோள் விடுத்தார்.

திருவள்ளூர் ஒன்றியத்துக்கு உள்பட்ட கிராமங்களில் நடைபெறும் வேளாண் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சியர் கொ.வீரராகவராவ் வியாழக்கிழமை ஆய்வு செய்தார். ஈக்காடு, புன்னப்பாக்கம், மேலானூர், ஆர்.ஆர்.கண்டிகை ஆகிய கிராமங்களில் அவர் ஆய்வு மேற்கொண்டு, நடப்பு சம்பா பருவத்துக்கான வளர்ச்சித் திட்டப் பணிகளைப் பார்வையிட்டார்.

அப்போது அவர் பேசியது: தமிழக அரசின் முதன்மை வேளாண் வளர்ச்சித் திட்டமான திருந்திய நெல் சாகுபடித் திட்டத்தின் கீழ், திருவள்ளூர் மாவட்டத்தில் இதுவரை 19 ஆயிரத்து 626 ஹெக்டர் பரப்பில் நெற்பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளன. இதே போல், மாவட்டத்தின் அனைத்து கிராமங்களிலும் திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பத்தை கடைப்பிடிக்க விவசாயிகளுக்கு அதிகாரிகள் அறிவுறுத்த வேண்டும் என்றார் அவர்.

இத்திட்டத்தில் 50 விவசாயிகளுக்கு, திருந்திய நெல் சாகுபடி செயல்விளக்கத்துடன் கூடிய தலா ரூ.1,500 மதிப்பிலான இடுபொருள்களை ஆட்சியர் வழங்கினார். மேலானூர் கிராமத்தில் "விசைகோனோ' களை எடுக்கும் கருவிகளை விவசாயிகளுக்கு 50 சதவீத மானிய விலையில் வழங்குமாறு அதிகாரிகளுக்கு அவர் உத்தரவிட்டார். ஆர்.ஆர்.கண்டிகை கிராமத்தில் நடைபெற்ற ஆய்வின் போது, வேளாண் இடுபொருள்கள் மற்றும் தென்னங்கன்று ஆகியவற்றை மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கினார்.

கோரிக்கை: திருந்திய நெல் சாகுபடி திட்டத்தின் மூலம் அதிக மகசூல் கிடைப்பதால் மாவட்டத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை அமைக்க வேண்டும் என விவசாயிகள் ஆட்சியரிடம் கோரிக்கை விடுத்தனர்.

மாவட்ட வேளாண் இணை இயக்குநர் என்.சுந்தர், வேளாண் துணை இயக்குநர் கே.பாபு, ஆட்சியரின் நேர்முக உதவியாளர் சுப்பிரமணியன், தோட்டக்கலை துணை இயக்குநர் நவநீதக்கண்ணன் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

## தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை 22-ஆம் தேதி தொடங்கும்

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை வரும் அக்டோபர் 22-ஆம் தேதி தொடங்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது.

**கறிக்கோழி வளர்ப்பு விவசாயிகளுக்கு கூலி உயர்வு**

கறிக்கோழி வளர்ப்பு விவசாயிகளின் கூலி உயர்வு உள்ளிட்ட பிரச்னைகளில் தலையிட்டு தீர்வு கண்டமைக்காக முதல்வர் ஜெயலலிதாவுக்கு விவசாயிகள் சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டது. இதற்காக அவர்கள் அனைவரும் தலைமைச் செயலகத்தில் முதல்வர் ஜெயலலிதாவை வெள்ளிக்கிழமை சந்தித்துப் பேசினர்.

**இதுகுறித்து, தமிழக அரசு வெளியிட்ட அறிவிப்பு:**

தமிழகத்திலுள்ள கறிக்கோழி வளரிப்பு விவசாயிகள், கறிக்கோழி நிறுவன உரிமையாளர்களால் தங்களுக்கு வழங்கப்படும் வளர்ப்புக் கூலியை உயர்த்துதல், ஆண்டுக்கு ஐந்து முறை கோழிக் குஞ்சுகள் வழங்குதல், வளர்ப்புக் கூலி கணக்கிடும் முறைகளைச் சீராக்குதல் உள்ளிட்ட பல்வேறு பிரச்னைகளுக்கு தீர்வு காண வேண்டி தொடர்ந்து கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்தக் கோரிக்கை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர், செயலாளர், இயக்குநர் ஆகியோர் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடத்த முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டார். அதன்படி, கறிக்கோழி வளர்ப்பு விவசாயிகள் சங்க பிரதிநிதிகளுக்கும், கறிக்கோழி நிறுவன உரிமையாளர் பிரதிநிதிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இந்தப் பேச்சுவார்த்தையின்போது கறிக்கோழி வளர்ப்புக் கூலியாக இப்போது வழங்கப்பட்டு வரும் கூலியிலிருந்து 15 சதவீதம் உடனடியாக உயர்த்தி வழங்க வேண்டுமென்றும், அடுத்த ஆண்டு ஜனவரி முதல் மேலும் 5 சதவீதம் உயர்த்தி மொத்தமாக 20 சதவீதம் உயர்த்தி வழங்கவும் முடிவு செய்யப்பட்டது. மேலும், கறிக்கோழி பராமரிப்பில் ஏற்படும் இதர பிரச்னைகள் மற்றும் வளர்ப்புக் கூலி கணக்கிடும் முறை உள்ளிட்ட பல்வேறு பிரச்னைகளுக்கும் சுமூக தீர்வு காணப்பட்டது.

இதுதொடர்பாக உடன்பாடும் ஏற்பட்டது. இதனால், கறிக்கோழி வளர்ப்பில் ஈடுபட்டுள்ள சுமார் 14 ஆயிரத்து 120 கறிக்கோழி வளர்ப்பு விவசாயிகளும் சுமார் ஒரு லட்சத்து 50 ஆயிரம் விவசாயத் தொழிலாளர்களும் கூலி உயர்வு மற்றும் இதர பலன்களைப் பெறுவார்கள்.

கறிக்கோழி பண்ணை தொழில் பிரச்னைகளுக்குத் தீர்வு காண உதவிய முதல்வர் ஜெயலலிதாவுக்கு அந்தத் தொழில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் மற்றும் உரிமையாளர்கள் வெள்ளிக்கிழமை நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தனர். இந்தச் சந்திப்பின் போது, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் டி.கே.எம்.சின்னையா, தலைமைச் செயலாளர் ஷீலா பாலகிருஷ்ணன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**19.10.2013**

## விவசாய கடன் வழங்கும் நடைமுறையில் மாற்றம்

தேனி:மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை சிட்டா, அடங்கல் கொடுத்து பயிர்க்கடன் வாங்கும் முறையில் மாற்றம் கொண்டு வரும் நடவடிக்கைகள் துவக்கப்பட்டுள்ளன. தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள், கூட்டுறவு சங்கங்கள், தனியார் வங்கிகளில் பயிர்க்கடன் வழங்கப்படும் போது விவசாயிகளிடம் இருந்து சிட்டா, அடங்கல் பெறப்படுகிறது. ஒரு முறை சிட்டா, அடங்கல் கொடுக்கும் விவசாயிகள், அதனை காட்டியே தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு கடன் பெறுகின்றனர்.

அடுத்த பயிர் சாகுபடிக்கு விவசாயிகள் மாறும் போது, அந்த பயிருக்கு உரிய கடன் தொகையில் இன்சூரன்ஸ் பிடித்தம் செய்வதிலும், இழப்பீடு வழங்குவதிலும் குழப்பம் ஏற்படுகிறது. எனவே,ஒவ்வொரு முறை பயிர்க்கடன் வழங்கும் போதும், சாகுபடி செய்துள்ள பயிருக்கு ஏற்ற வகையில் சிட்டா, அடங்கல் பெறவும், விவசாயிகள் கொடுத்துள்ள ஆவணங்களின் அடிப்படையில் சாகுபடி செய்துள்ளனரா, என வங்கி அதிகாரிகள் நேரடியாக கள ஆய்வு செய்த பின்னரே வங்கி கடன் வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

## நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறப்பு

தேனி : தேனி மாவட்டத்தில், நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

தேனி மாவட்டத்தில் குறுவை நெல் 14 ஆயிரத்து 707 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. குறுவை நெல் வரும் அக்டோபர் மாதம் இறுதியில் அறுவடையாக உள்ளது.

அறுவடையாகும் நெல்லை விவசாயிகளிடமிருந்து, தமிழ்நாடு நுகர் பொருள்

வாணிப கழகத்தின் மூலம் நேரடியாக கொள்முதல் செய்ய கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. அதன் விபரம்:

தேனி மாவட்டத்தில் கம்பம், உத்தமபாளையம், மற்றும் சின்னமனூர் ஆகிய இடங்களில் கொள்முதல் நிலையங்கள் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. குறுவையில் உற்பத்தி செய்யப்படும், நெல் சன்னரகம் குவிண்டால் 1415 ரூபாய்க்கும் , பொதுரகம் குவிண்டால் 1360 ரூபாய்க்கும் கொள்முதல் செய்ய தமிழக முதல்வர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்திற்கு உத்தரவிட்டுள்ளார்.

சரியான எடை விலை கிடைத்திட தேனி மாவட்ட விவசாயிகள் குறுவை நெல்லை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் அமைக்கப்பட்டுள்ள நேரடி நெல்கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்து பயனடையுமாறு தேனி கலெக்டர் பழனிசாமி தெரிவித்துள்ளார்.

## ஒரு போக பாசன நிலங்களுக்கு 18ம் கால்வாயில் தண்ணீர் திறப்பு

கூடலூர் : ஒரு போக பாசன நிலங்களுக்காக, 18ம் கால்வாயில் நேற்று 279 கன அடி நீர் திறந்து விடப்பட்டது.

லோயர்கேம்பில் இருந்து, போடி மீனாட்சிபுரம் வரை, 40 கி.மீ., நீளத்தில் அமைந்துள்ளது 18ம் கால்வாய்த்திட்டம். இக்கால்வாய்க்கு பெரியாற்றில் இருந்து ஒவ்வொரு ஆண்டும், அக்டோபர் மாதம் தண்ணீர் திறந்து விடப்படும். இந்நிலையில், நேற்று காலை தேனி கலெக்டர் பழனிசாமி லோயர்கேம்பில் உள்ள 18ம் கால்வாய் தலைமதகு பகுதியில் ஷட்டரை இயக்கி திறந்து வைத்தார். தொடர்ந்து 9 நாட்களுக்கு, வினாடிக்கு 279 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதன் மூலம், 44 கண்மாய்கள் நிரப்பப்பட்டு, 4615 ஏக்கரில் ஒரு போக பாசன நிலங்கள் பயன்பெறும். பெரியாறு, வைகை நீர்ப்பாசன கண்காணிப்பு பொறியாளர் ராஜேஸ், செயற்பொறியாளர் காசிபாண்டியன், உதவி செயற்பொறியாளர்கள் அன்புச்செல்வன், பாலமுருகன்.

உதவி பொறியாளர்கள் சந்தனகுமார், சக்கரவர்த்தி, ஆர்.டி.ஓ.,ஜானகி, தாசில்தார்

தனலிங்கம், ஐந்து மாவட்ட விவசாய சங்க தலைவர் அப்பாஸ், 18ம் கால்வாய் விவசாய சங்க தலைவர் ராமராஜ், செயலாளர் திருப்பதிவாசன், துணைத்தலைவர்கள் காளிமுத்து, சலேத், தேவாரம் பேரூராட்சி தலைவர் சீனிவாசன், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி செயலர் கதிரேசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## பயிர் இன்சூரன்ஸ், வறட்சி நிவாரணம் பெற விவசாயத்தை கைவிடும் நிலையில் விவசாயிகள்

காரைக்குடி : சிவகங்கை மாவட்டத்தில் பயிர் இன்சூரன்ஸ் தொகை,வறட்சி நிவாரண தொகை, இன்னும் வழங்கப்படாததால், அதை நம்பிய விவசாயிகள் விவசாய பணிகளை தொடர முடியாமல் உள்ளனர்.

சிவகங்கை மாவட்டத்தில் 93 ஆயிரம் எக்டேரில், நெல் பயிரிடப்படுகிறது.ஆண்டின் சராசரி மழையளவு 897 மி.மீ., முதல் 930 மி.மீ.,வரை. கடந்த 2012ம் ஆண்டு, 546 மி.மீ., மழை மட்டுமே பெய்தது. இதனால் வளர்ந்த பயிர்கள், வெயிலுக்கு வாடின.

முன் எச்சரிக்கை நடவடிக்கையாக, தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தின் கீழ், விவசாயிகள் பயிர்களுக்கு தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி, மற்றும் அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளில் இன்சூரன்ஸ் செய்தனர். பயிர் இன்சூரன்ஸ் செய்தவர்களின், நிலங்கள் வேளாண்மை துறை, வருவாய் துறை, இன்சூரன்ஸ் துறை அதிகாரிகளால் மதிப்பீடுசெய்யப்பட்டு, அரசுக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

சிவகங்கை மாவட்டத்தை பொறுத்தவரை, இதுவரை பயிர் இன்சூரன்ஸ் தொகை வழங்கப்படவில்லை. விவசாயத்தை கைவிடும் எண்ணத்தை தவிர்ப்பதற்காகவே, பயிர் இன்சூரன்ஸ் வழங்கப்படுகிறது.

மழை பெய்து, விதைத்துள்ள விவசாயிகள், இந்த தொகையையே பெரிதும் நம்பி இருந்தனர். ஆனால், இதுவரை வழங்கப்படவில்லை. இதனால், மேற்கொண்டு விவசாய பணிகளை செய்ய முடியாமல், தவிக்கின்றனர்.

அமராவதிபுதூர் விவசாயி ஆறுமுகம் கூறியதாவது: அரசு வறட்சி நிவாரணமாக, சிவகங்கை மாவட்டத்துக்கு ஒதுக்கிய தொகையும், விவசாயிகளுக்கு வந்து சேரவில்லை. பயிர்களின் அழிவிற்கு ஏற்ப வழங்கப்படும், இன்சூரன்ஸ் தொகையும் இதுவரை வழங்கப்படவில்லை. இதனால், விவசாய பணிகளை தொடங்க முடியாமல், விவசாயிகள், நிலத்தை தரிசாக போட்டுள்ளனர்.

வேளாண்துறை அதிகாரி ஒருவர் கூறும்போது: சிவகங்கை மாவட்டத்தில், பாதிப்புக்குள்ளான விவசாய பரப்பை காட்டிலும், அதிக அளவு பரப்பு, இன்சூரன்ஸ் செய்யப்பட்டுள்ளது.

விவசாயிகள், தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி, அரசுடைமையாக்கப்பட்ட வங்கி இரண்டிலும் பயிர் இன்சூரன்ஸ் செய்துள்ளனர். இதனால், அவற்றை தணிக்கை செய்யும் பணி நடந்து வருகிறது. விரைவில் வழங்க ஏற்பாடு செய்யப்படும், என்றார்.

### விவசாயிகள்குறைதீர் கூட்டம்

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி கலெக்டர் அலுவலகத்தில், விவசாயிகள் குறை தீர் கூட்டம் வரும், 25ம் தேதி நடக்கிறது.கலெக்டர் ராஜேஷ் வெளியிட்ட அறிக்கை:கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் குறை தீர் கூட்டம் வரும், 25ம் தேதி காலை 11 மணிக்கு கிருஷ்ணகிரி கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடக்கிறது. கூட்டத்துக்கு கலெக்டர் ராஜேஷ் தலைமை வகிக்கிறார்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டு தங்கள் குறைகளை தெரிவித்து நிவர்த்தி செய்து கொள்ளலாம்.இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### தாவரங்கள், வன உயிரினங்களை பாதுகாக்க கலெக்டர் வேண்டுகோள்

தர்மபுரி: ""தாவரங்கள், வன உயிரினங்களை பாதுகாக்க வேண்டும்," என கலெக்டர் விவேகானந்தன் பேசினார்.தர்மபுரி, அவ்வையாளர் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் வன உயிரின வார விழா நடந்தது. வன பாதுகாவலர் மஞ்சுநாதா தலைமை வகித்தார். இதையொட்டி நடந்த பல்வேறு போட்டிகளில்

வெற்றி பெற்ற, 39 மாணவ, மாணவியர்களுக்கு பரிசு வழங்கி, கலெக்டர் விவேகானந்தன் பேசியதாவது:தர்மபுரி மாவட்டம் வனப்பகுதிகளை கொண்ட மாவட்டம். மாவட்டத்தில், 300க்கும் மேற்பட்ட வன விலங்குகள் உள்ளன. நாடு நன்ற இருக்க வன வளம் நன்றாக இருக்க வேண்டும். 33 சதவீதம் வளவளம் வேண்டும். வனத்தையும், வன விலங்குகளையம் நாம் பாதுகாக்க வேண்டும்.பன்முக உயிரியில் விரிவாகத்தினை நாம் மேற்கொள்ள வேண்டும். அழியும் நிலையில் உள்ள தாவர வகைகள், வன உயிரினங்களை பாதுகாக்க வேண்டும். நம் மாவட்டத்தில் ஏராளானமான மூலிகை வளங்கள் உள்ளன. தர்மபுரி மாவட்டத்தில் உள்ள, 92 மேல்நிலைப்பள்ளி மாணவர்கள், தங்களது பள்ளிகளில் உள்ள தாவரங்களை கண்டறிந்து, அவற்றை வகைப்படுத்தி தொகுக்க வேண்டும்.ஒவ்வொரு பள்ளியிலும், பத்து வகையான மூலிகைகளை தொகுத்தால், 920 வகையான தாவரங்களை வகைப்படுத்த முடியும். இப்பணியை கல்வி துறையினர் வரும் ஜனவரி மாதத்துக்குள் தொகுத்து வெளியிட வேண்டும்.இவ்வாறு பேசினார்.

மாவட்ட வன அலுவலர் திருநாவுக்கரசு, அரூர் மாவட்ட வன அலுவலர் ராமசுப்பிரமணியன், நவீன நாற்றாங்கால் கோட்ட வன அலுவலர் அன்பு, வன பாதுகாப்பு படை உதவி வன பாதுகாவலர் ரபெல்ரெட்டி, மாவட்ட கல்வி அலுவலர் (பொ) முனிராஜ், தலைமையாசிரியர் முருகன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## உரங்களில் மணல் கலப்படம் கண்காணிக்க கலெக்டர் உத்தரவு

திண்டுக்கல் : தனியார் கடைகளில் விற்பனை செய்யப்படும் உர மூடைகளில் ஆற்று மணலை கலப்படம் செய்வது, அதிக விலைக்கு விற்பனை செய்வது, பில் தராதது போன்ற முறைகேடுகள் குறித்து, ஆய்வு நடத்தி அறிக்கை அளிக்குமாறு அதிகாரிகளுக்கு, கலெக்டர் வெங்கடாச்சலம் உத்தரவிட்டுள்ளார்.

உழவு பணிகளை துவக்குவதற்கு வசதியாக, அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மற்றும் தனியார் கடைகளில் உரங்கள் இருப்பு

வைக்கப்பட்டுள்ளன.

உர மூடைகளை வாங்கும் போது, பில்லில் கையெழுத்திட்டு ஒரிஜினல் நகலை விவசாயிகள் பெற்றிருக்கவேண்டுமென்றும் தெரிவித்திருந்தது.

பெரும்பாலான உர கடைகளில் இந்த நடைமுறை பின்பற்றபடவில்லை என, திண்டுக்கல்லில் நடந்த குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகள் புகார் தெரிவித்தனர்.

காம்ப்ளக்ஸ் உட்பட அனைத்து 50 கிலோ உர மூடைகளில் 5 கிலோ ஆற்று மணல் கலப்படம் செய்யப்படுகிறது. விலை குறைந்த உரங்களை உயர் ரக உர மூடைக்கான சாக்கில் அடைத்து விற்பனை செய்கின்றனர். ஒவ்வொரு மூடைக்கும் ரூ. 100 லிருந்து 200 வரை அதிகமாக பணம் பெறுகின்றனர். பில் கேட்டால் தருவதில்லை என விவசாயிகள் குற்றம்சாட்டினர்.

மாவட்டத்தில் உள்ள அனைத்து தனியார் உர கடைகளில் திடீர் ஆய்வு நடத்தி அறிக்கை அளிக்குமாறு வேளாண் துறையினருக்கு கலெக்டர் வெங்கடாசலம் உத்தரவிட்டார்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**19.10.2013**

**மழையால் வரத்து குறைந்தது சின்ன, பெரிய வெங்காயம் விலை தொடர்ந்து ஏறுமுகம் பொதுமக்கள் கவலை**

சேலம், : சின்னவெங்காயம், பெரிய வெங்காயம் தொடர்ந்து ஏறுமுகத்தில் இருப்பதால் பொதுமக்கள் கவலையடைந்துள்ளனர்.

சேலம் மாவட்டத்தில் மேச்சேரி, மல்லமூப்பம்பட்டி, தலைவாசல், மல்லூர், ஓமலூர், வாழப்பாடி உள்ளிட்ட பகுதிகளிலும், தர்மபுரி மாவட்டத்தில் பாலக்கோடு, மாரண்டஹள்ளி, காரிமங்கலம், அரூர், பாரப்பாரப்பட்டி, பாப்பிரெட்டிப்பட்டியிலும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பர்கூர், ஊத்தங்கரை, போச்சம்பள்ளி உள்ளிட்ட பகுதிகளில் சின்னவெங்காயம் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது.

இந்த பகுதிகளில் சாகுபடி செய்யப்படும் சின்னவெங்காயத்தை சேலம் மார்க்கெட்டுக்கு தினசரி டன் கணக்கில் கொண்டு வரப்படுகிறது. தமிழகத்தில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் மழையால், சின்னவெங்காயம் சாகுபடி செய்யப்பட்டுள்ள நிலங்களில் தண்ணீர் தேங்கி நிற்கிறது. இத னால் சின்னவெங்காயம் விளை ச்சல் பாதிக்கப்பட்டுள் ளது.

அ தே பே �ல ம காராஷ் டிரா மாநிலம் நாசிக், அகமத் நகர், புனே, சோலாப்பூர், கோலாப்பூர், கர்நாடகா மாநிலம் பெல்லாரி உள்பட பல்வேறு பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் பெரிய வெங்காயம் சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு அறுவடை செய்யப்படும் பெரிய வெங்காயத்தை, விவசாயிகள் லாரிகள் மூலம் டன் கணக்கில் சேலம் மார்க்கெட்டுக்கு அனுப்புகின்றனர். கடந்த சில நாட்களாக வட மாநிலங்களில் பெய்த மழையால் பெரியவெங்காயம் வரத்து குறைந்துள்ளது.

வரத்து குறைந்ததால், சின்ன வெங்காயம், பெரிய வெங்காயத்தின் விலை

தொடர்ந்து ஏறுமுகத்தில் உள்ளது. இதனால் பொதுமக்கள்
கவலையடைந்துள்ளனர். இது குறித்து சேலம் மார்க்கெட் வெங்காய வியாபாரிகள் கூறியதாவது:

சேலம் மாநகரத்தில் செவ்வாய்பேட்டை பால் மார்க்கெட், லீபஜார், கடைவீதி,

ஆனந்தா இறக்கம், திருமணிமுத்தாறு ஓரம் காய்கறி மார்க்கெட் உள்ளிட்ட

பகுதிகளில் 30க்கும் மேற்பட்ட சின்ன வெங்காயம் மற்றும் பெரிய வெங்காய

மொத்த வியாபாரிகள் உள்ளனர். இந்த கடைகளுக்கு வட மாநிலம் மற்றும்

தமிழகத்தின் பல பகுதிகளில் இருந்து தினசரி 120 டன்னுக்கு மேல் வெங்காயம்

விற்பனைக்கு வரும்.

கடந்த ஒன்றரை மாதத்திற்கு முன்பு வட மாநிலங்களில் பெய்த மழையால் பெரிய வெங்காயம் விளைச்சல் கடுமையாக பாதித்துள்ளது. அதேபோல் தமிழகத்தில் பெய்த மழையால் சின்னவெங்காயத்தின் விளைச்சலும் பாதிக்கப்பட்டுள்ளது.

உழவர்சந்தை, காய்கறி மார்க்கெட்டுக்கு சின்ன மற்றும் பெரிய வெங்காயம் வரத்து

குறைந்ததால், நேற்று முன்தினம்

ரூ50

முதல்

ரூ60

என விற்ற சின்ன வெங்காயம், தற்போது

ரூ56

முதல்

ரூ60

எனவும்,

ரூ42

முதல்

ரூ50

என விற்ற பெரியவெங்காயம்

ரூ42

முதல்

ரூ58

என விற்பனை செய்யப்படுகிறது. இவ்வாறு வியாபாரிகள் கூறினர்.

**மாவட்டம் முழுவதும் பரவலாக மழை மேட்டூரில் 14 மி.மீ. பதிவு**

மேட்டூர், : சேலம் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக வெயில் கொளுத்தி வந்த நிலையில், நேற்று முன்தினம் முதல் பரவலாக மழை பெய்து வருகிறது. மேட்டூரில் நேற்று முன்தினம் இரவு நல்ல மழை பெய்தது. நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்த மழையால் கடந்த 15ம் தேதி வினாடிக்கு 3,252 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று காலை 4,320 கனஅடியாக அதிகரித்தது. ஆக மொத்தம் மேட்டூர் பகுதியில் நேற்று காலை வரை 14 மி.மீ. மழை பதிவாகி உள்ளது.

ஆத்தூர், தலைவாசல் பகுதியில் நேற்று வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. நண்பகல் நேரத்தில் சிறிது தூரலுடன் மழை பெய்தது. தம்மம்பட்டி பகுதியில் நேற்று காலை பலத்த இடியுடன் பெய்த மழையால் மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். வாழப்பாடியில் நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று காலை வரை விட்டு விட்டு மழை பெய்தது. ஓமலூர் பகுதியில் நேற்று முன்தினம் இரவு பரவலாக மழை பெய்தது. நேற்று காலை வரை விட்டு விட்டு மழை பெய்ததால் பள்ளமான பகுதிகளில் தண்ணீர் தேங்கியது. தாரமங்கலம் பகுதியில் நேற்று அதிகாலை 2 மணி முதல் காலை வரை விட்டு விட்டு மழை பெய்தது. நங்கவள்ளி,

ஜலகண்டாபுரத்தில் நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணி முதல் நேற்று காலை வரை விட்டு விட்டு மழை பெய்தது. சங்ககிரி பகுதியில் நேற்று அதிகாலை முதல் காலை வரை மழை பெய்தது. இதனால், வெப்பம் தணிந்து குளிர்ந்த காற்று வீசியது. மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

இடைப்பாடி பகுதியில் நேற்று அதிகாலை 1 மணி முதல் மழை பெய்தது. இதனால், பள்ளமான பகுதிகளில் தண்ணீர் தேங்கியது.

### நெய்யின் விலை உயர்வால் விற்பனை, ஏற்றுமதி சரிந்தது தீவன தட்டுப்பாட்டால் கால்நடை வளர்ப்பு குறைந்தது

ராசிபுரம், : தமிழகத்தில் போதிய மழை இல்லாமல் பயிர்கள் காய்ந்து போனதால், கால்நடைகளுக்கு தீவன பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதன்காரணமாக, உற்பத்தி குறைந்து நெய்யின் விலை உயர்ந்துள்ளது. இதை தொடர்ந்து நெய் ஏற்றுமதி மற்றும் விற்பனை குறைந்துள்ளது.

சுற்றிலும் மலைகளால் சூழப்பட்டுள்ள ராசிபுரத்தில் ஆறுகளோ, குளங்களோ இல்லை. ஆனால் சிறந்த மண் வளம் உள்ளது. ராசிபுரத்தை சுற்றியுள்ள கிராமப்பகுதிகளில் முழுக்க முழுக்க நிலத்தடி நீரை மட்டும் நம்பி விவசாயம் செய்யப்படுகிறது. நிலத்தடி நீரின் வளத்தால் பயிர்கள் நன்கு செழிப்படைகிறது. இப்பகுதி விவசாயிகளின் உபதொழிலாக கால்நடை வளர்ப்பு உள்ளது. ஆடு, மாடு, எருமைகள் உள்ளிட்ட பல்வேறு கால்நடைகளுக்கு போதுமான தீவனம் கிடைப்பதால் அவை நன்கு வளர்கின்றன.

மாடுகள், எருமைகள் தரும் பாலிலிருந்து வெண்ணெய், தயிர், மோர் ஆகியவற்றின் மூலம் விவசாயிகளுக்கு வருவாய் கிடைக்கிறது. பாலிருந்து தனியே பிரித்து எடுக்கும் வெண்ணெயை தங்கள் தேவைகளுக்கு போக மீதியை விற்பனை செய்து வருகின்றனர். பாலிலிருந்து பிரித்து எடுக்கப்படும் தயிர் மற்றும் வெண் ணெயை பத்திரமாக சேகரிக்கின்றனர். ஒரு வாரம் சேகரிக்கப்படும் வெண்ணெயை ராசிபுரம் கொண்டு வருகிறார்கள்.

இந்த வெண்ணெயை காய்ச்சி நெய் எடுக்கப்படுகிறது. இவ்வாறு வெண்ணெயை காய்ச்சுவதற்காகவே கடைவீதி, கச்சேரி வீதி, பூக்கடைவீதி, உள்ளிட்ட பல்வேறு இடங்களில் மண்டிகள் உள்ளன. உள்ளூர் வியாபாரிகள் அமைத்துள்ள மண்டிகளில் வெண் ணெயை உருக்கி நெய் காய்ச்சும் வசதியை ஏற்படுத்தியுள்ளனர். முதலில் மண்டிகளுக்கு கொண்டு வரப்படும் வெண்ணெய் தரமாக உள்ளதா என்று �நுகர்ந்து� பார்த்து சோதனை செய்த பிறகே, அதை உருக்கி நெய்யாக்கும் பொருட்களான அடுப்பு, விறகு, நெய் காய்ச்சும் பாத்திரங்கள் தரப்படுகிறது.

காய்ச்சும் போது நெய் மணப்பதற்கு, அதனுடன் முருங்கை இலையையும் சேர்த்து

காய்ச்சுகின்றனர். அவ்வாறு காய்ச்சப்படும் நெய் படிகளில் அளந்து உள்ளூர் வியாபாரிகள் வாங்கி செல்கின்றனர். இந்நிலையில் கடந்த சில மாதங்களாக தமிழகத்தில் போதிய மழையின்மை காரணமாக விளைநிலங்களில் தீவனப்பயிர்கள், சோளம், உள்ளிட்ட பல்வேறு பயிர்கள் காய்ந்து கருகிபோனது. இதனால் கிராமங்களில் கறவை மாடுகள் வைத்திருந்தவர்கள், அடிமாட்டு விலைக்கு விற்பனை செய்து விட்டனர். இதனால் தற்போது போதிய கறவைகள் இல்லை. இதையடுத்து, வெண்ணெய் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. சில நாட்களுக்கு முன்பு வரை, ஒரு லிட்டர் நெய்யின் விலை ரூ300 ஆக இருந்தது. உற்பத்தி குறைந்ததால், விலை உயர்ந்து தற்போது ரூ340 ஆக விற்கப்படுகிறது. கறவை மாடுகள் இறைச்சிக்காக கேரளாவுக்கு கொண்டு செல்லப்படுவதாலும், இறைச்சியை பதப்படுத்தி வெளிமாநிலங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுவதாலும் பால் உற்பத்தி நாளுக்கு நாள் குறைந்து வருகிறது.

இதை தொடர்ந்து நெய்யின் விலை அதிகரித்துள்ளது. விலை உயர்ந்துள்ளதால், தீபாவளி பண்டிகைக்காக கடைகளில் தயாரிக்கப்படும் இனிப்புகளில் நெய்யின் பயன்பாடு குறைக்கப்பட்டுள்ளது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**19.10.2013**

**கள்ளக்குறிச்சி பகுதியில் மணிலா பயிர் செய்வதில் விவசாயிகள் ஆர்வம்**



கள்ளக்குறிச்சி,

கள்ளக்குறிச்சி பகுதியில் மணிலா பயிர் செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர்.

மணிலா சாகுபடி

கள்ளக்குறிச்சி பகுதியில் விவசாயம் முக்கிய தொழி லாக நடைபெறுகிறது. இங்கு நெல், கரும்பு, மக்காச்சோளம், மணிலா, எள் ஆகியவை அதிகம் பயிர் செய்யப்படு கிறது.

இந்திலி, மேலூர், மலைக் கோட்டாலம் வாணவரெட்டி, புக்கிரவாரி, தண்டலை, வாணியந்தல், காட்டனந்தல், தென்கீரனூர் உள்பட பல்வேறு கிராமங்களில் 100 ஏக்கர் பரப்பளவில் ஆனி பட்டத்தில் மணிலா பயிர் செய்யப்பட்டது. தற்போது

பெய்த மழையால் செடிகள் செழிப்பாக வளர்ந்து, இன்னும் சில வாரங்களில் அறுவடை செய்யும் நிலையில் உள்ளது.

<u>உற்பத்தி செலவு குறைவு</u>

ஒரு ஏக்கருக்கு 30 முதல் 40 மூட்டை மணிலா கிடைக்கும் என்று விவசாயிகள் எதிர் பார்க்கின்றனர். ஒரு மூட்டை ரூ.1,500-க்கு விற்பனை யாகிறது. இதற்கு உற்பத்தி செலவாக ரூ.10 ஆயிரம் ஆகிறது.

உற்பத்தி செலவு மற்றும் தண்ணீர் பாய்ச்சுதல், உரம் போடுதல், களை எடுத்தல் போன்ற பராமரிப்பு செலவு குறைவு என்பதால் கள்ளக் குறிச்சி சுற்றுப்பகுதி விவசாயி கள் மணிலா பயிர் சாகுபடி செய்வதில் ஆர்வம் காட்டுகின் றனர்.

**நீர்பிடிப்பு பகுதியில் மழை தொடங்கியதால் சாத்தியாறு அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு**



அலங்காநல்லூர்,

சாத்தியாறு அணைக்கு நீர்வரத்து அதிகரித்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

<u>தொடர்மழை</u>

மதுரை மாவட்டத்தில் வளமிக்க பகுதியாக அலங்காநல்லூர் மற்றும் பாலமேடு பகுதிகள் விளங்குகின்றன. இவற்றுக்கு வளம்சேர்ப்பது சாத்தியாறு அணை என்றால் மிகையில்லை. இந்த அணையை நம்பி கீழச்சின்னனம்பட்டி, அய்யூர், கோவில்பட்டி, எர்ரம்பட்டி, முடுவார்பட்டி உள்பட 10 கிராம கண்மாய்கள் பயன்பெறுகின்றன. அணையின் நீர்மட்ட கொள்ளளவு 29 அடியாகும்.

இந்த அணைக்கு வகுத்துமலை, சிறுமலை தொடர்ச்சி, மஞ்சமலைசரிவு, செம்பூத்துக்கரடு ஆகியவை இதன் நீர்பிடிப்பு பகுதிகளாகும். மலைப்பகுதியிலிருந்து மழைக்காலங்களில் நீர் வரத்து இருக்கும். ஆனால் கடந்த ஆண்டு தென்மேற்கு பருவமழையும், வடகிழக்கு பருவமழையும் முற்றிலும் பொய்த்ததால் விவசாயம் அடியோடு பாதிக்கப்பட்டது. இந்த ஆண்டு மழை பெய்யும் என விவசாயிகள் நம்பியிருந்தனர். தென்மேற்கு பருவமழையின்போது எதிர்பார்த்த மழை இல்லாததால் விவசாயிகள் கவலையில் மூழ்க தொடங்கினர்.

எனினும் அவர்களுக்கு நம்பிக்கை அளிக்கும் வகையில் கடந்த சில தினங்களாக மழை பெய்து வருகிறது. கடந்த 16–ந் தேதி ஒரே நாளில் 46 மில்லி மீட்டர் அளவுக்கு மழை பெய்தது. 18–ந் தேதி 7 மில்லி மீட்டர் அளவுக்கு மழை பதிவானது. மேலும் அணையின் நீர்பிடிப்பு பகுதியான வகுத்துமலை, சிறுமலை பகுதியிலும் மழை பெய்து வருகிறது.

<u>விவசாயிகள் எதிர்பார்ப்பு</u>

இதனால் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து வருகிறது. கடந்த ஆண்டு முதல் கிட்டத்தட்ட 20 மாதங்களாக வறண்டு கிடந்த இந்த அணையில் தற்போது நீர்வரத்து ஏற்பட்டுள்ளது விவசாயிகளை மகிழ்ச்சியடைய வைத்துள்ளது. அணைக்கு வரும் நீர்வரத்தை உதவி பொறியாளர் சீனிவாசன் மற்றும் பணியாளர்கள் கண்காணித்து வருகின்றனர்.

அணை 29 அடியும் நிரம்பி அதன் மூலம் கண்மாய்கள் நிரம்பினால் விவசாயம் செழிப்பதோடு நிலத்தடி நீர்மட்டமும் உயர்ந்து கிணறுகளிலும் தண்ணீர் வற்றாமல் இருக்கும். எனவே இந்த ஆண்டு அணை நிரம்புவதை விவசாயிகள் ஆவலுடன் எதிர்பார்த்து வருகின்றனர்.

**தானிய கிடங்குகள் அமைக்க மத்திய அரசு ரூ.450 கோடி ஒதுக்கீடு இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு**

புதுடெல்லி

உணவு பாதுகாப்பு சட்டத்தை அமல்படுத்துவதில் மத்திய அரசு தீவிர கவனம் செலுத்தி வருகிறது. இதன் ஓர் அங்கமாக ஒவ்வொரு மாநிலத்திலும் வட்டார அளவில் இடைநிலை உணவு தானிய கிடங்குகள் அமைப்பதற்காக மத்திய அரசு

ரூ.450 கோடி செலவிடுகிறது. இதன் காரணமாக பொது விநியோக முறையின் கீழ் ஏழை மக்களுக்கு உணவு தானியங்களை திறம்படவும், தங்கு தடையின்றியும் வழங்க முடியும் என மத்திய அரசு நம்புகிறது.

**ஊரக வேலைவாய்ப்பு**

இந்த சேமிப்பு கிடங்குகள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாத திட்டத்தின் கீழ் கட்டப்படும் என ஊரக மேம்பாட்டு அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் தெரிவித்தார். இதற்கான கட்டுமானச் செலவை மத்திய அரசு ஏற்கும். மாநில அரசுகள் தேவையான நிலத்தை வழங்க வேண்டும். முதல் ஆண்டில் இந்த கிடங்குகளின் சேமிக்கும் திறன் 15 லட்சம் டன்னாக இருக்கும். நாடு முழுவதும் இதற்காக 6,612 பிளாக்குகள் அடையாளம் காணப்பட்டுள்ளது. இவற்றின் சராசரி சேமிப்பு திறன் 44,000 டன்னாக இருக்கும்.

இடைநிலை சேமிப்பு கிடங்குகள் உருவாக்கப்படுவதால், சேமிப்பு வசதி மிகவும் குறைவாக உள்ள உத்தரபிரதேசம், பீகார், மகா£ஷ்டிரா, மத்திய பிரதேசம், சத்தீஸ்கர், ஜார்கண்ட் மற்றும் ஒடிசா ஆகிய மாநிலங்கள் பயன் பெறும் என ஜெய்ராம் ரமேஷ் மேலும் தெரிவித்தார்.

உணவு பாதுகாப்பு சட்டத்தால் 67 சதவீத மக்களுக்கு மலிவு விலையில் உணவு தானியங்கள் கிடைக்கும். இதன்படி ஒரு மாதத்தில் ஒரு நபருக்கு கிலோ ரூ.3 விலையில் 5 கிலோ அரிசி, 5 கிலோ கோதுமை (கிலோ ரூ.2) மற்றும் கம்பு உள்ளிட்ட மோட்டா ரக தானியம் 5 கிலோ (கிலோ ரூ.1) ரேஷன் கடைகள் மூலம் விநியோகிக்கப்படும்.

**6.20 கோடி டன் தேவை**

உணவு பாதுகாப்பு சட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற குறைந்தபட்சம் 6.20 கோடி டன் உணவு தானியங்கள் தேவைப்படுகிறது. எனவே, உணவு தானியங்களை சேமித்து வைக்கும் வசதியும் நன்றாக இருக்க வேண்டியது அவசியம்.